மாலை முரசு

பக்கங்கள் 18+9

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆவணி 26 புதன்கிழமை 11.09.2024 | அதிர்வு 41

## புலமைப் பரிசில் வகுப்புக்கு இன்று நள்ளிரவு முதல் தடை

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை தொடர்பான வழிகாட்டல் வகுப்புகள், கருத்தரங்குகள், செயலமர்வுகளை நடத்துவதற்கு இன்று புதன்கிழமை நள்ளிரவு முதல் தடை விதிக்கப்பட்டுள்ளது.

04 ▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



## ரணில் - அநுர ஜோடியா? சஜித்தா?

# வெற்றியாளர் யார் என்பதை சிந்தித்துத் தீர்மானியுங்கள்!

### மக்களிடம் எதிர்க்கட்சித் தலைவர் வேண்டுகோள்

“தற்போது நாட்டு மக்களுக்குத் தெளிவான தீர்மானம் ஒன்று இருக்கும். ரணில் விக்கிரமசிங்க மற்றும் அநுரகுமார திஸாநாயக்க ஜோடிக்குப் புள்ளடி இடுவதா அல்லது இந்த நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக ஐக்கிய மக்கள் சக்தியை வெற்றி பெறச் செய்வதா என்று தீர்மானிக்க வேண்டும்.”

03 ▶




# ரணிலின் இந்த ஆட்சி தொடர வேண்டும்! இல்லையேல் நாடு மீண்டும் படுகுழியில்!!



### இப்படி அமைச்சர் டக்ளஸ் எச்சரிக்கை

“ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்த ஆட்சி தொடர வேண்டும். அப்போது தான் கடந்த இரு வருட வளர்ச்சியைத் தொடர்ச்சியாகக் கொண்டு செல்ல முடியும். இன்றேல் அதளபாதாளத்தில் நாடு மீண்டும் வீழும்.”

– இவ்வாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நேற்று செவ்வாய்க் கிழமை பிற்பகல் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்துகொண்ட இந்தக் கூட்டத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேலும் உரையாற்றுகையில்,

“கிடைக்கின்ற சந்தர்ப்பங்களை நாம் தவறவிடும் பட்சத்தில் அடுத்த ஐந்து வருடங்கள் அதனை நிவர்த்தி செய்வதற்காகக் காத்திருக்க வேண்டும்.

இந்த ஜனாதிபதித் தேர்தலில் சரியான முடிவை எடுக்க வேண்டும். உண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்த ஆட்சி தொடர வேண்டும். அப்போது தான் கடந்த இரு வருட வளர்ச்சியைத் தொடர்ச்சியாகக் கொண்டு செல்ல முடியும்.

04 ▶




# தகுதி தராதரம் பாராது ஈஸ்டர் தாக்குதலின் பிரதான சூத்திரதாரிகளுக்குத் தண்டனை!

## பேராயரிடம் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் வாக்குறுதி

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகைக்கும் இடையிலான விசேட சந்திப்பு இன்று காலை கொழும்பு பேராயரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்றது.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு நீதி நிலைநாட்டப்படும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இங்கு வாக்குறுதியளித்தார்.

“உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணங்களைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் நியமிக்கப்படுகின்ற நீதிமன்றக் கட்டமைப்புக்குத் நாம் தோள் கொடுப்போம். நீதிமன்றக் கட்டமைப்பை மேலும் உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்போம். இதற்காக மேற்கொள்ள வேண்டிய சட்ட ரீதியான நடவடிக்கைகளை முறையாகச் செயற்படுத்துவோம்.” – என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இங்கு வாக்குறுதியளித்தார்.

அவ்வாறே, உயர்த்து ஞாயிறு தினத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணங்களை வழங்குவதோடு, இதன் பிரதான சூத்திரதாரிகளுக்குத் தகுதி தராதரம் பாராது தண்டனையைப் பெற்றுக்கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுப்பேன் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் இங்கு மேலும் சுட்டிக்காட்டினார்.







# வெற்றியாளர் யார் என்பதை சிந்தித்துத் தீர்மானியுங்கள்!

**முதலாம் பக்கத் தொடர்ச்சி...**

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு ஐக்கிய மக்கள் கூட்டணி ஏற்பாடு செய்த 44 ஆவது மக்கள் வெற்றிப் பேரணி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் குளியாபிட்டி நகரில் முன்னெடுக்கப்பட்டது. இதில் உரையாற்றும்போதே சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இந்த நாடு அதல பாதாளத்தில் வீழ்ந்து, மக்களின் வாழ்க்கை வீழ்ச்சியடைந்து, தொழிற்சாலைகள் மூடப்பட்டு, தொழில் வாய்ப்புகள் உருவாக்கப்படாத ஒரு யுகத்தில் இருக்கின்றோம். குழந்தைகளுக்கும் தாய்மார்களுக்கும் மந்த போசனை அதிகரிக்கின்ற இந்த யுகத்தில் மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தி, விருத்தியடையச் செய்வதற்கான யுகத்தை உருவாக்குவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தயாராக இருக்கின்றது.

இந்த இளைஞர் சமூகத்துக்காக பத்து இலட்சம் புதிய தொழில் வாய்ப்புகளை உருவாக்குவதோடு, வறுமையைப் போக்குகின்ற நோக்கில் மாதம் ஒன்றுக்கு 20 ஆயிரம் ரூபா விதம் 24 மாதங்களுக்கான நிவாரணத்தை வழங்குவோம்." – என்றார்.















# கருத்தரங்குக்கு வராத மாணவர்களை பிரம்பால் தாக்கிய பாடசாலை அதிபர்

## எழுவர் வைத்தியசாலையில்

நுவரெலியா கல்வி வலயத்துக் குட்பட்ட கந்தபளைப் பகுதியில் உள்ள தமிழ் பாடசாலையொன்றில் இருந்து இம்முறை தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள ஏழு மாணவர்கள், அதிபரின் தாக்குத லுக்கு இலக்கான நிலையில் நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டனர்.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட மாணவர்களின் பெற்றோரால் ராகலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு முன்வைக்கப்பட்டது.

அத்துடன், நுவரெலியா வலய கல்வி காரியாலயத்துக்குச் சென்று பாடசாலை அதிபரை இடமாற்றம் செய்யுமாறும், அவருக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்குமாறும் பெற்றோர் எழுத்து மூலம் அறிவித்தனர்.

எனினும், இந்தச் சம்பவம் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படாததால் பெற்றோர் மற்றும் பழைய மாணவர்கள் இணைந்து இன்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட மாணவர்களின் பெற்றோர் கூறுகையில்,

"கடந்த சனிக்கிழமை பாடசாலை அதிபரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கல்விக் கருத்தரங்குக்குச் செல்லாத ஏழு மாணவர்களைப் பிரம்பால் அதிபர் தாக்கியுள்ளார். இதனால் பிள்ளைகளுக்கு நடக்கக் கூட முடியாதுள்ளது." – என்று குறிப்பிட்டனர்.

அதேவேளை, போராட்டம் இடம் பெற்ற இடத்துக்கு வருகை தந்த நுவ ரெலியா வலயக் கல்விப் பணிமனை அதிகாரிகளும், ராகலை பொலிஸ் நிலைய அதிகாரிகளும் உடனடியாக இந்த விடயம் தொடர்பாக துரித நடவடிக் கைகளை மேற்கொள்வதாக தெரி வித்து பாடசாலையில் இருந்து மேற்படி அதிபரை வெளியேற்றி நுவரெலியா வலயக் கல்விப் பணிமனைக்கு அழைத் துச் சென்றதன் பின்னர் போராட்டம் கைவிடப்பட்டது.

# மனைவியின் அந்தியேட்டியின்போது கணவனும் உயிரிழப்பு

## யாழ். கரணவாய் பகுதியில் சோகம்



மனைவியின் அந்தியேட்டிக் கிரியை யின்போது கணவனும் உயிரிழந் துள்ளார்.

யாழ்ப்பாணம், வடமராட்சி – கரண வாய் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் தெரியவருவ தாவது,

கரணவாய் பகுதியைச் சேர்ந்த குடும்பப் பெண்ணொருவர் கடந்த ஆகஸ்ட் மாதம் உயிரிழந்திருந்தார். அவரின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றன.

அதன்போது, உயிரிழந்த பெண்ணின் கணவனான முத்தன் தர்மலிங்கம் என்பவர் திடீரென நோய்வாய்ப்பட்டு உயிரிழந்துள்ளார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**புலமைப் பரிசில்...**

பரீட்சை வினாத்தாள்களின் வினாக் களை வழங்குதல் அல்லது அதனை ஒத்த வினாக்களை வழங்குவதாகத் துண்டுப்பிரசுரம் விநியோகித்தல் அல்லது அவற்றை வைத்திருத்தல் என்பனவற் றுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று பரீட்சைகள் திணைக்களம் வெளி யிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது.


எவரேனும் ஒருவர், நிறுவனம் அல் லது தரப்பினர் இந்த அறிவுறுத்தலை மீறுவார்களாயின் அது தொடர்பில் அரு கிலுள்ள பொலிஸ் நிலையம், பொலிஸ் தலைமையகம் அல்லது பரீட்சைகள் திணைக்களத்தில் முறைபாடு செய்ய முடியுமெனவும் அறிவிக்கப்பட்டுள் ளது.

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை நடைபெறவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**ரணிலின் ஆட்சி...**

இன்றேல் அதளபாதாளத்தில் நாடு மீண்டும் வீழும். அதனை உணர்ந்து ரணில் விக்கிரமசிங்கவைத் தெரிவு செய்ய வேண்டும். எங்களை நம்பி உங்கள் வாக்குகளை அளியுங்கள். கட்சி என்ற ரீதியில் அதற்கு நாம் பொறுப் பாக இருப்போம்.

நமது அரசியல் தலைமைகள் தென் னிலங்கை ஆட்சியாளர்களுடன் உறவை வைத்துக் கொண்டு தமது சுயலாபங் களைப் பெற்ற பின்னர் அரசு ஏமாற்றி விட்டது என்று மக்களைப் பலர் ஏமாற்று வார்கள். நாம் அவ்வாறு ஒருபோதும் சொல்ல விரும்பவில்லை. நாம் சொல்வ தைத்தான் செய்வோம். ஜனாதிபதி யின் மீது நம்பிக்கை வைத்து செயற்பட வேண்டும்." – என்று கேட்டுக்கொண்டார்.


Muhurtham
Jewels
Our Strategy Is To Provide
Our Customers
With Quality Products
more details CLICK
Bridal Set NEK 106 / 375
Harams
Haram NEK 318
Harams
Haram NEK 473
Harams
Haram NEK 477
Harams
Necklaces
Chains
Harams
Pendants
2900 Markham Rd Unit A30,
Toronto, ON M1X 1E6,
Canada
www.muhurthamjewels.ca
Jewelsmuhurtham
Muhurtham Jewels
(416) 321-7555

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# ஜனநாயகக் கடமை

நாட்டில் ஜனநாயக ஆட்சியை நிலை நிறுத்துவதில் முக்கிய பங்கு - பொறுப்பு - கடமை - நிறைவேற்றதிகார ஜனாதிபதிக்கு உண்டு.

ஆகையினால் நாட்டுக்கு ஒரு ஜனாதிபதியை தெரிவு செய்யும் நடவடிக்கையில் நாட்டு மக்கள் ஆழமாக சிந்தித்து, தராதரங்களை சீர்தூக்கிப் பார்த்து, மிகுந்த பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும் என்று சிரேஷ்ட சட்டத்தரணிகளை உள்ளடக்கிய 'சட்டத்தரணிகள் ஒன்றிப்பு' அமைப்பு கேட்டுக் கொண்டிருக்கின்றது.

இவ்விடயத்தில் அந்த அமைப்பு சுட்டிக்காட்டி உள்ள அம்சங்கள் மிகவும் முக்கியமானவை. நாட்டின் ஒவ்வொரு வாக்காளனும் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் அவை.

ஒரு ஜனநாயகக் கட்டமைப்பில் அதன் அடிப்படை நிறுவனங்களான நாடாளுமன்றம், ஜனாதிபதி தலைமையிலான நிறைவேற்று அதிகாரம் மற்றும் நீதிமன்றங்களின் பல்வேறு அதிகாரங்களும் பொறுப்புகளும் உரிய முறையில் மதிக்கப்படுவது அவசியமாகும்.

நாட்டினதும் அதன் மக்களனதும் நல்வாழ்வுக்கு நாட்டில் சட்டத்தின் ஆட்சி பாதுகாக்கப்பட்டு பேணப்படுவது முக்கியமாகும். நாட்டில் ஒரு நிலையான மற்றும் செழிப்பான பொருளாதாரம், ஒரு ஜனநாயக மற்றும் நியாயமான சமூக ஒழுங்கு மற்றும் பொறுப்பான நிர்வாகத்தை கட்டியெழுப்புவதற்கு இவை முக்கியமானவையும் ஒருங்கிணைந்த பகுதியுமாகும்.

மனித உரிமைகளைப் பாதுகாப்பது உட்பட, நிர்வாகத்தில் முடிவெடுப்பதில் மக்கள் பங்கேற்கும் உரிமை, சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல்களை அவ்வப்போது நடத்துதல், நீதித் துறைச் சுதந்திரம், ஊழலைத் தடுத்தல், ஆட்சி நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மை, சமமான அதிகாரப் பகிர்வு, சமத்துவத்திற்கான உரிமை, பாகுபாடு காட்டாமை மற்றும் சட்டத்தின் முன் சம பாதுகாப்பு, பொறுப்புக்கூறல் உத்தரவாதம் மற்றும் தண்டனையின்மையை நிராகரித்தல் போன்ற பல கூறுகளை உள்ளடக்கியதே சட்டத்தின் ஆட்சி, என்பதை மக்களும் அரசாங்கங்களும் அங்கீகரிக்க வேண்டும்.

பல ஆண்டுகளாக, இலங்கை சட்டத்தின் ஆட்சி மற்றும் ஜனநாயக விழுமியங்கள் மற்றும் நெறிமுறைகளில் நிலையான சரிவைக் கண்டுள்ளது. இது நாட்டின் பொருளாதார நல்வாழ்வை நேரடியாகப் பாதித்தது. மக்களின் அன்றாட வாழ்க்கையை பாதித்தது. சட்டத்தின் ஆட்சியின் வீழ்ச்சியானது பொருளாதார முறைகேடு, பெரிய அளவிலான லஞ்சம் மற்றும் ஊழல், தண்டனையில்லாமை, மொத்த மனித உரிமை மீறல் மற்றும் நபர்கள் மற்றும் சொத்துக்களுக்கு எதிரான வன்முறை ஆகியவற்றை ஏற்படுத்தியுள்ளது. மனித உரிமைகள், ஜனநாயகம் போன்றவற்றைப் பாதிக்கும் பல சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன.

*2022* இன் பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடியானது, சட்டத்தின் ஆட்சியின் முறிவு மற்றும் முக்கிய நிறுவனங்களின் பலவீனம் ஆகியவற்றின் விளைவாக ஏற்பட்ட நிர்வாக நெருக்கடியாகும். ஆகவே தலைகீழாக மாற்றப்பட வேண்டியவை நிறைய உள்ளன. - என்று சட்டத்தரணிகள் கூட்டிணைவு சுட்டிக்காட்டுவது முக்கியமானதாகும்.

எனவே, நீதித்துறை, அரசமைப்புக் கவுன்ஸில், பொலிஸ், பொது சேவை, மத்திய வங்கி மற்றும் சுயாதீன ஆணைக்குழுக்கள் உள்ளிட்ட நிறுவனங்களின் சுதந்திரம் மற்றும் ஒருமைப்பாட்டைப் பாதுகாப்பதற்கும் பேணுவதற்கும் அர்ப்பணிப்புள்ள ஜனாதிபதி ஒருவரைத் தெரிவு செய்து தேவையற்ற அரசியல் தலையீடு மற்றும் அழுத்தத்திலிருந்து அவற்றைப் பாதுகாப்பது அவசியம். - என்று அந்த அமைப்பு கூறுகின்றது.

செழிப்புமிக்க நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு ஜனநாயக விழுமியங்களை மதித்துப் போற்றி நிலைநிறுத்தும் ஓர் உறுதியான தலைவர் நாட்டுக்குத் தேவை. அந்தத் தேவையை நிறைவு செய்யும் பொறுப்புணர்வோடு ஜனநாயகக் கடமையை வரும் *21* ஆம் திகதி நாட்டு மக்கள் ஆற்ற வேண்டும்.



# பாடசாலைத் தளபாடங்கள் திருத்தியடைத்து வழங்கல்

**(தலவாக்கலை பி.கேதீஸ்)**

டென்மார்க் நாட்டைச் சேர்ந்த அருள் மிகு ஸ்ரீ அபிராமி உபாசகி அன்னையின் நிதி அனுசரணையில் தலவாக்கலை கிறேட்வெஸ்டன் பாடசாலையில் உடைந்த நிலையில் காணப்பட்ட நூறு மாணவர் மேசை, நாற்காலிகள் திருத்தம் செய்யப்பட்டு மாணவர்களின் பாவனைக்காகக் கையளிக்கப்பட்டுள்ளன.

பாடசாலை அதிபர் எம்.ஐ.எம்.பாரிஸிடம் இவை கையளிக்கப்பட்டன.




# புதிய உலக சாதனை படைத்த குறிஞ்சாக்கேணி மாணவன்

**( எச். எம் ஹலால்தீன் )**

ஐக்கிய இராச்சியத்தைத் தலைமையகமாக கொண்ட உலகளாவிய சாதனை புத்தக நிறுவனத்தால் உலக சாதனையாளர்களை இனம் காண்பதற்கான போட்டியில் கிழக்கு மாகாணத்தின் கிண்ணியா, குறிஞ்சாக்கேணியைச் சேர்ந்த 4 வயதையுடைய மாணவன் நஸ்மி அக்லான் பிலால் புதிய உலக சாதனையாளனாகத் தன்னை அடையாளப்படுத்தியுள்ளார்.

இந்த மாணவன் பத்தின் 100 ஆம் அடுக்கு வரை அவற்றின் பெயர்களை ஆங்கிலத்தில் 2 நிமிடம் 12 செக்கன்களில் வேகமாகக் கூறி இந்தச் சாதனையை நிகழ்த்தினார்.

இச்சாதனை செய்தமைக்காகஅந்த நிறுவனத்தால் சான்றிதழ் மற்றும் பதக்கம் வழங்கி மாணவன் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

கந்தளாய் வைத்தியசாலையில் பணிபுரியும் இயன் மருத்துவர் நஸார் முஹமட் நஸ்மி மற்றும் கிண்ணியா வைத்தியசாலையில் கடமையாற்றும் இயன் மருத்துவர் அஸ்ரப் பாத்திமா பஸீஹா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.



# சஜித் பிரேமதாஸவை ஆதரித்து இறக்காமத்தில் அலுவலகம்

(நூருல் ஹுதா உமர்)


ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளரும், எதிர்க் கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸவை ஆதரித்து இறக்காமம் பிரதேசத்தில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஜனாதிபதி தேர்தல் அலுவலகம் ஒன்று நேற்று (10) திறந்து வைக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி யின் உச்ச பீட உறுப்பினர் ஏ.சி.றியாஸ் தலைமையில் இது இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவரும், முன்னாள் இராஜாங்க அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினர்களுமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ், பைசால் காசிம், கட்சியின் பிரதித் தலைவரும், முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநருமான டாக்டர் எம்.எல். எம்.ஏ.ஹிஸ்புல்லாஹ், கட்சியின் பிரதி தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஐ.எம். மன்சூர், கட்சியின் பிரதி தேசிய அமைப்பாளரும், முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சருமான எம்.எஸ்.உதுமாலெப்பை, உச்ச பீட உறுப்பினரும், அம்பாறை மாவட்ட செயற்குழுவின் செயலாளருமான ஏ.சி. சமால்தீன், இறக்காம பிரதேச அமைப்பாளர் எஸ்.எல்.நிசார், முன்னாள் இறக்காம பிரதேச சபையின் தவிசாளரும், உச்ச பீட உறுப்பினருமான எம்.ஐ.நைசர், முன்னாள் இறக்காம பிரதேச சபையின் உறுப்பினர் எம்.எல்.முஸ்னி, மத்திய குழுவின் செயலாளர் எம்.எல்.ஜிப்ரி மற்றும் கட்சி முக்கியஸ்தர்களும், ஆதரவாளர்களும் கலந்து கொண்டனர்.









# ஜனாதிபதி ரணிலை ஆதரித்து சாய்ந்தமருது இளைஞர் சந்திப்பு

(அஸ்லம் எஸ்.மௌலானா)

ஜனாதிபதித் தேர்தலில் சுயேட்சை வேட்பாளராகப் போட்டியிடும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை ஆதரித்து ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இளைஞர் ஒன்று கூடல் நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை (10) இரவு சாய்ந்தமருதில் அமைந்துள்ள ஜனாதிபதியின் கல்முனைத் தொகுதி ஒருங்கிணைப்பு அலுவலகத்தில் நடைபெற்றது.

ஜனாதிபதியின் கல்முனைத் தொகுதிக்கான அதிகாரமளிக்கப்பட்ட முகவரும் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் குழுத் தலைவருமான கலாநிதி ஏ.எம். ஜெமீல் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம். எம். முஷாரப், கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியின் முன்னாள் அதிபர் ஐ.எல்.ஏ. மஜீட், விளையாட்டு உத்தியோகத்தர் ஏ.எம்.றிபாஸ், சமூக செயற்பாட்டாளர் அஸ்வர் சலாம் உள்ளிட்டோர் உரையாற்றினர்.

இதன்போது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் வெற்றியை உறுதிப்படுத்துவதற்காக கல்முனைத் தொகுதியில் முன்னெடுக்கப்படும் பிரசார நடவடிக்கைகளை இளைஞர்களின் பங்களிப்புடன் மேலும் விஸ்தரித்து காத்திரமாக முன்னெடுப்பது குறித்து வலியுறுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் பிரதித் தவிசாளர் ஏ.எம். ஜாஹிர், பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் எம்.பஸ்மீர், ஐ.தே.க. வட்டார அமைப்பாளர்கள், கட்சிப் பிரமுகர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்பட பெருந்திரளான இளைஞர்கள் பங்கேற்றிருந்தனர்.







# முஸ்லிம் கலாச்சார போட்டியில் கிழக்கு மாகாணம் முதலிடம்!

( வி.ரி. சகாதேவராஜா)

அகில இலங்கை முஸ்லிம் கலாசாரப் போட்டியில் கிழக்கு மாகாணம் முதலாம் இடத்தைப் பெற்று வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது. இந்தத் தேசிய மட்டப் போட்டி கடந்த சனி மற்றும் ஞாயிறு தினங்களில் கொழும்பு ஸாஹிரா கல் லூரியில் நடைபெற்றது.

கல்வி அமைச்சின் சுற்றறிக்கையின் அடிப்படையில் முஸ்லிம் பாடசாலைகள் அபிவிருத்தி கிளையின் கல்விப்பணிப் பாளர் மேஜர் என்.ரீ.நசுமுதீனின் வழிகாட்டலில் தேசிய மட்ட போட்டிகள் நடைபெற்றன.

முஸ்லிம் சமய கலாசார அழகியல் பெறுமானங்களின் ஊடாக மாணவர் களின் ஆளுமை பண்புகளை விருத்தி செய்து அதனூடாக தேசிய மற்றும் சர்வதேச தொடர்புகளை மேம்படுத்தி நற்பிரஜைகள் உருவாக்குவதற்கு பங்களிப்பு செய்தல் எனும் பிரதான நோக்கத்தில் இப்போட்டி நடைபெற்றது.

தேசிய மட்டத்தில் நடைபெற்ற 28 நிகழ்ச்சியில் கிழக்கு மாகாணம் பதினாறு முதலாம் இடங்களையும் மூன்று இரண்டாம் இடங்களையும் நான்கு மூன்றாம் இடங்களையும் பெற்று அகில இலங்கை ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்று வரலாற்றுச் சாதனையைப் பதிவு செய்தது.

கிழக்கு மாகாணக் கல்விப் பணிப் பாளர் சுஜாதா குலேந்திரகுமார் தலை மையில் மாகாண உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். ஷஹீட் வழிகாட்டலில் இந்தச் சாதனை நிகழ்த்தப்பட்டது.

இச் சாதனைக்கு வழிவகுத்த அனை வரையும் கிழக்கு மாகாண கல்வி பணிப்பாளர் திருமதி சுஜாதா குலேந்திர குமார் பாராட்டியுள்ளார்.

இதற்கு ஒத்துழைப்பு வழங்கிய மாகாண கல்வி பணிப்பாளர், மாகாண கல்வித் திணைக்களத்தின் அனைத்து உத்யோகத்தர்கள், வலயக் கல்வி பணிப்பாளர்கள் மற்றும் இஸ்லாம் பாடத்திற்கு பொறுப்பான உதவி கல்வி பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோச கர்கள், பாடசாலை அதிபர்கள் மற்றும் மாணவர்களுக்கும் வாழ்த்துக்களையும் கிழக்கு மாகாண இஸ்லாம் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.ஷஹீட் நன்றிகளை தெரிவித்தார்.







# முல்லைத்தீவின் இரகசிய சுற்றுலாத்தளம்!

"கண்ணுக்கடங்காத கடல் ஒரு காட்சி
எண்ணுக்கடங்காத மணல் ஒரு காட்சி"

அரைவட்ட வடிவில் கடல் நிலதததுக்குள் ஒடுங்கி குடா வடிவில் இயற்கை அழகுடன் பார்ப்பவர்களை வசீகரிக்கும் அதன் பரந்த காட்சிகள். ஆஹா செம் மணிகளில் கடலலைகள் மோதும் அழகும் சிவந்த பாறை தொடர்களும் நிறைந்த அழகிய பசுமைமிக்க கடற்கரை தான் " புலி பாய்ந்த கல்."

வட மாகாணத்தில் உள்ள ஒரே ஒரு அழகிய கடற்கரை "பழைய செம்மலை" கடற்கரை ஆகும். இந்த அழகிய கடற்கரையை " புலி பாய்ந்த கல்" என் றும் ஊரவர்கள் அழைப்பதும் வழக்கமாயிற்று.

வங்காள விரிகுடாவின் ஒரு பகுதியாக 235 கடற்கரைகளில் 112 ஆவது இடத்திலும் அதன் மையமான கொழும்பு நகரத்திலிருந்து 267.7 கிலோ மீற்றர் தொலைவிலும் அமைந்துள்ளது. மிகவும் நீளமான (ஒரு கிலோ மீற்றருக்கு மேல்) அழகிய கடற்கரை இதுவாகும். இக்கடற்கரைக்கு அருகில் நாயாறு கடற்கரை (2.14 மைல்), கொக்கிளாய் கடற்கரை (2.97 மைல்), கறுப்பு மணல் கடற்கரை (8.83மைல்), முல்லைத்தீவு கடற்கரை (12.79 மைல்) என்பன காணப்படுகிறது.

முல்லைத்தீவு கொக்கிளாய் பிரதான வீதி ஊடாக செல்லும்போது இரண்டு பக்கங்களும் அடர்ந்த காடுகள் சூழ்ந்த சிறிய பாதை ஊடாக உள்ளே ஒரு கிலோ மீற்றர் தொலைவில் இக்கடற்கரை உள்ளது. இக்கடக்கரைக்கு அருகில் உணவகங்கள் இல்லை. அலம்பில், நாயாறு, சிலாவத்தை, முல்லைதீவு ஆகிய இடங்களில் உள்ள உணவகங்களில் உணவை இலகுவாகப் பெற்றுக் கொள்ளலாம்.

பழைய செம்மலைக் கடற்கரையில் சிறப்பு என்னவென்றால் ஒரு பக்கம் கடலும் மறுபக்கம் செம்மையான மலையும் காணப்படுவதாகும்.

இங்கு பொது நுழைவு இலவசம். இயற்கையான எழில் கொஞ்சும் அழகு, பிரகாசமான மணல், நீச்சலுக்கு உகந்த கடற்கரை, மென்மையான அலைகள், மலைப் பகுதியில் மரங்களின் கோர்வைகள் எத்தனை முறை சென்றாலும் கண்கள் அலைமோதும் ஒன்றே கூற வேண்டும்.

பாசிகள், கண்டல் தாவரங்கள், கடல் தாவரங்கள் அற்ற தூய்மையான காற்றோட்டம் கொண்ட கடல். ஆங்காங்கே செங்கற்பாறைகள், ஓடைகள் சிதறி காணப்படுகின்றன.

முல்லைத்தீவில் பார்க்க வேண்டிய சுற்றுலா தளங்களில் செம்மலை பழைய கடற்கரை சிறப்பு வாய்ந்த ஒரு கடற்கரை ஆகும். இங்கு சிங்கள மக்கள் குறித்த காலத்தில் குடும்பமாக வந்து சிறு குடிசைகள் அமைத்து மீன்பிடிக்கை தொழிலை மேற்கொள்வார்கள்.

இந்தக் கடற்கரை திருமணம், பூப்பு நீராட்டு விழா போன்றவற்றுக்கு வீடியோ, படப்பிடிப்புகள் மேற்கொள் வதற்கு சிறந்த இடமாக காணப்படுகிறது.

இக் கடற்கரை திருகோணமலை புறாமலைக் கடற்கரையை ஒத்ததாக காணப்படுகிறது. குடும்பமாக அல்லது நண்பர்களுடன் சேர்ந்து இந்த இடத்துக்குச் சுற்றுலா செல்லும்போது புத்துணர்ச்சியை பெற முடியும்.

**சு.திலேஜா**
**ஊடக கற்கைகள் துறை,**
**யாழ். பல்கலைக்கழகம்.**

குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998





# ஐந்து தொடர் வெற்றிகளுடன் மாத்தளை ஸாஹிராக் கல்லூரி

## குழுநிலைச் சம்பியன்களாக தெரிவு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தால் நடத்தப்படும் 17 வயதுக்கு உட்பட்டோருக்கான 50 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் போட்டியின் லீக் தொடரின் இறுதி ஆட்டத்தில் மாத்தளை ஸாஹிராக் கல்லூரி சம்பியனானது.

மாத்தளை ஸாஹிராக் கல்லூரிக்கும் மாத்தளை சிரிமாவோ பண்டாரநாயக கல்லூரிக்கும் இடையே மாத்தளை சென். தோமஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் முதலில் துடுப்பாடிய மாத்தளை ஸஹிரா கல்லூரி அணி 34.4 ஓவர்களில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 234 ஓட்டங்களைப் பெற்றது .

பதிலுக்குத் துடுப்பாடிய மாத்தளை சிரிமாவோ பண்டாரநாயக கல்லூரி அணி 47.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 191 பெற்றது. 45 ஓட்டங்களால் மாத்தளை ஸாஹிராக் கல்லூரி அணி வெற்றி பெற்றது.

மாத்தளை ஸாஹிராக் கல்லூரியானது மாத்தளை சிங்கள பௌத்த கல்லூரி அணி, மாத்தளை கிறிஸ்துதேவ கல்லூரி, மாத்தளை நாவுலஸ்ரீ நாக கல்லூரி, மாத்தளை கைக்காவல மத்திய கல்லூரி, மாத்தளை ஸ்ரீ மாவோ பண்டாரநாயக கல்லூரி என்பவற்றை வெற்றி கொண்டதன் மூலம் மாத்தளை மாவட்ட குழுநிலைச் சம்பியன்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.



# வரலாறு காணாத சனக்கூட்டத்தில் தேர்தல் பிரச்சாரம் செய்தார் அநுர!

(எஸ்.எம்.எம்.றம்ஸான்)



ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு தேசிய ஐக்கிய முன்னணி ஜனாதிபதி வேட்பாளர் அநுர குமார திசாநாயக்கவை ஆதரித்து குருநாகலை நகரில் இடம்பெற்ற தேர்தல் பிரச்சார கூட்டத்தில் இதுவரை நடைபெற்ற பிரச்சாரக் கூட்டங்கள் விட அதிக எண்ணிக்கையான ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர். தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அனுர குமார திசாநாயக்க சுகவீனமுற்ற நிலையிலும் இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சனத்திரள் மத்தியில் உரையாற்றினார்.




# கட்சி தாவிச் சென்றோரால் எந்தப் பாதிப்பும் ஏற்படாது!

**மன்னாரில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் பதியுதீன் தெரிவிப்பு**

(எம்.ஏ.ஏ.அக்தார்)

மக்களின் ஆணையை மீறி, கட்சியின் கட்டுக்கோப்பை உடைத்துக் கொண்டு, வேறு கட்சிகளில் இணைந்தோரால் எந்தப் பாதிப்பும் ஏற்படாது என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

மன்னாரில் நேற்று (10) நடைபெற்ற மக்கள் சந்திப்பில் ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவித்த போதே மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

எமது கட்சியின் உள்ளூராட்சி மன்ற முன்னாள் உறுப்பினர்கள் ஒரு சிலரும், தவிசாளர் ஒருவரும் ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்துள்ளனர்.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராகவும் நாடாளுமன்றத்தில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராகவுமே எமது கட்சி, மக்களின் ஆணையைக் கோரியது. இதனால் சஜித் பிரேமதாஸவுக்குக் கணிசமான வாக்குகளை எமது கட்சி பெற்றுக்கொடுத்தது.

நாடாளுமன்றத்தில் நான்கு எம்.பிக்களைப் பெறுமளவுக்கு எமது கட்சிக்கு மக்களின் ஆணை கிடைத்தது. இந்த ஆணையை மீறி, இந்த எம்.பிக்கள் ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்துள்ளனர். இவர்களைப் பின் தொடர்ந்து உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் சிலரும் கட்சி மாறிவிட்டனர்.

மக்களின் ஆணைகளை மீறிய இவர்களை மன்னிக்கவே முடியாது. எதிர்வரும் காலங்களில் இவர்களை மீண்டும் எம்முடன் இணைக்கப் போவதில்லை. இவர்கள் சென்றதால் கட்சியின் வளர்ச்சியில் எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை. எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் பத்து எம்.பிக்களைப் பெறுவோம். அந்தளவுக்கு மக்களின் ஆர்வம் அதிகரித்துள்ளது.

கோட்டாவின் சகாக்களைப் பாதுகாக்கவே இவர்கள் ரணிலுடன் இணைந்துள்ளனர். கடந்தகால ஊழல்வாதிகளும் அமைச்சர்களும் தங்களைப் பாதுகாப்பதற்கே, ரணிலை வெல்லவைக்கப் பார்க்கின்றனர். சஜித் பிரேமதாஸவின் ஆட்சியில் ஊழல்வாதிகள் தண்டிக்கப்படுவர்.

ரணில் விக்ரமசிங்கவும் அநுரகுமார திஸாநாயக்கவும் இரவில் இரகசியமாக பேசிக்கொள்கின்றனர். வெவ்வேறாகப் போட்டியிடுவோர் ஏன் பேச வேண்டும்? வெற்றியைத் தக்கவைப்பதற்கான வழிகளையே இவ்விருவரும் ஆராய்கின்றனர். அநுர ஆட்சிக்கு வந்தால், ஆறு மாதங்களில் மீண்டும் ஜனாதிபதியாகலாமென ரணில் நினைக்கிறார். இவை எதுவும் நடக்காது.

சிங்களப் பகுதிகளில் எந்த எதிர்ப்புகளும் இன்றிக் கூட்டங்களில் பங்கேற்கிறேன். ஐ.எஸ்.ஐ.எஸ். என்று எனக்கு வழக்குத் தொடுத்தனர். வாக்களிப்பதற்காக பஸ்களில் மக்களைக் கொண்டு வந்ததாகக் குற்றம் சுமத்தினர். இந்தக் குற்றச்சாட்டுக்களில் இருந்து நீதிமன்றம் என்னை நிரபராதி எனத் தீர்ப்பளித்தது. இதனால்,சிங்கள மக்கள் என்னை நம்புகின்றனர்.-என்றார்.

# புத்தளம் கலாச்சார மண்டபத்தில் சனியன்று இரத்த தான முகாம்!

(கற்பிட்டி எம்.எச்.எம்.சியாஜ்)

புத்தளம் சாஹிரா தேசிய பாடசாலையின் பழைய மாணவர் குழுவினரான 2003 க.பொ.த. சாதாரணதர குழுவினரான "சஹீரியன்ஸ் ட்யூட்ஸ்" அமைப்பினர் ஏற்பாடு செய்துள்ள இரத்த தான முகாம் சனிக்கிழமை (14) காலை 8.30 மணியில் இருந்து புத்தளம் கலாச்சார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

"உதிரம் கொடுப்போம் உயிர் காப்போம்" எனும் தொனிப் பொருளில் இந்த இரத்த தான நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

புத்தளம் தள வைத்தியசாலையில் இரத்தப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகவும், அவசரமாக இரத்தம் தேவைப்படுவதாகவும் அண்மையிலே புத்தளம் தள வைத்தியசாலை நிர்வாகம் அறிவித்தல் விடுத்திருந்தது.

இதனை கருத்தில் கொண்டே இந்த பழைய மாணவர் சங்கம் இரத்த தான நிகழ்வை உடனடியாக ஏற்பாடு செய்துள்ளது.

பெண்களும் இரத்தம் தானம் செய்வதற்கான விரிவான பிரத்தியேகமான இட அமைப்புக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

புத்தளம் தள வைத்தியசாலையின் இரத்த வங்கி பொறுப்பாளர் டாக்டர் மெரீனா தலைமையில் நடைபெறவுள்ள இந்த இரத்த தான நிகழ்வில் அனைவரையும் கலந்து கொண்டு இரத்த தானத்தை வழங்குமாறு பழைய மாணவர் சங்கத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.





# மின்னல் தாக்கத்தால் பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு உதவி வழங்கல்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

இயற்கை அனர்த்தமாகிய மின்னல் தாக்கத்தால் பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு இணைந்த கரங்கள் அமைப்பால் உலர் உணவு மற்றும் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

கடந்த மாதம் ஏற்பட்ட மின்னல் தாக்கத்தால் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டு வீடு மற்றும் அனைத்து உடமைகளும் முற்றாக எரிந்து நாசமாகின.

இந்த நிலையில் பொருளாதார ரீதியில் பின்னடைவைச் சந்தித்த ஒலுவில் பிரதேசத்தில் வசிக்கும் குடும்பமொன்றுக்கு உலர் உணவுப் பொருள்களும், காரைதீவு சண்முகா மகாவித்தியாலயத்திலும், திராய்கேணி அ. த. க. பாடசாலையிலும் கல்வி பயிலும் அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த மாணவிகளுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன.

இந் நிகழ்வில் இணைந்த கரங்கள் அமைப்பின் செயற்பாட்டாளர்கள் லோ.கஜரூபன்,காந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# நிந்தவூர் ஆஸ்பத்திரிக்கு மயக்கமருந்து இயந்திரம்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

நிந்தவூர் ஆதார வைத்தியசாலையின் சத்திர சிகிச்சைப் பிரிவுக்கு அத்தியாவசியத் தேவையாகக் காணப்பட்ட மயக்க மருந்து இயந்திரம் மற்றும் மகப்பேற்று விடுதிக்கு உரிய இயந்திரம் என்பன வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

பி.எஸ்.டி.ஜி. வேலைத் திட்டத்தின் கீழ் சுமார் 10 மில்லியன் ரூபா நிதியில் கொள்வனவு செய்யப்பட்ட குறித்த மருத்துவ உபகரணங்களைக் கையளிக்கும் நேற்று முன்தினம் (09) நிந்தவூர் ஆதார வைத்தியசாலையில் இடம்பெற்றது.

வைத்தியசாலையின் பதில் வைத்திய அத்தியட்சகரும், மகப்பேற்று வைத்திய நிபுணருமான டாக்டர் எம்.எஸ்.எம். பாயிஸ் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் திருமதி சகீலா இஸ்ஸடீன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உபகரணங்களை வழங்கி வைத்தார்.

இந்த நிகழ்வில் பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சீ.எம். மாஹிர், பிராந்திய உயிரியல் மருத்துவ பொறியியலாளர் என்.எம்.இப்ஹாம், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.







# ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் அலுவலகம் அட்டாளைச்சேனையில்

(நவாஸ்)

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் வெற்றிக்காக அட்டாளைச்சேனை பிரதேசத்தில் தேர்தல் அலுவலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப் இதனைத் திறந்து வைத்துள்ளார்.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளிட்ட பலரும் ஜனாதிபதியின் வெற்றிக்காக காத்திரமான உரைகளையும் நிகழ்த்தியிருந்தனர்.

அலுவலகத் திறப்பு நிகழ்வை முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் தமீம் ஆப்தீன், இணைப்பாளர் எஸ்.எம்.அறூஸ், மத்திய குழவின் செயலாளர் ஏ.எல்.கியாஸ்தீன், இளைஞர் அமைப்பாளர் அர்சாத் மற்றும் மத்திய குழு அங்கத்தவர்கள் பலரும் ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



# எல்லா மத மக்களும் விரும்பும் தலைவனை வெல்லச் செய்வோம்

## ஏறாவூரில் பெண்களிடம் ரிசாட் கோரிக்கை

(எம்.ஏ.ஏ.அக்தார்)

ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளரும், எதிர்க்கட்சி தலைவருமான சஜித் பிரேமதாஸவை ஆதரித்து, அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தவிசாளர் முன்னாள் பிரதியமைச்சர் எம்.எஸ்.எஸ். அமீர் அலியின் தலைமையில் பெண்கள் மாநாடு மீராவோடை அமீர் அலி கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசிய தலைவரும், முன்னாள் அமைச்சருமான நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றினார்.

இங்கு உரையாற்றிய அவர்,

நாளுக்கு நாள் சஜித் பிரேமதாஸவுக்கான ஆதரவு அதிகரித்து வருகிறது. கூட்டத்தில் பங்கேற்கச் செல்லும் இடங்களில் எல்லாம் முண்டியடித்துக் கொண்டு மக்கள் எங்களைச் சந்திக்கின்றனர்.

சிறந்த ஆட்சியைச் சஜித் பிரேமதாஸவால்தான் தர முடியுமென்ற நம்பிக்கை நாட்டின் நாலா திசைகளுக்கும் பரவி வருகிறது. வெற்றி நிச்சயிக்கப்பட்டுள்ளது. பல்லின சமூகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சித் தலைவர்கள் எம்முடனே உள்ளனர். எதிர்க்கட்சித் தலைவரான சஜித் பிரேமதாஸவின் சேவைகள் விசாலமானவை. ஸ்மாட் வகுப்பறைகள், பாடசாலைகளுக்கான பஸ்களை வழங்கி மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளை ஊக்குவித்தார். சுகாதார சேவைக்குள் அரசியல் தலையீடுகள் நுழைந்து, சேவையைச் சீரழித்தபோது, சொந்த நிதியில் மருந்துகளைக் கொள்வனவு செய்வதற்கு உதவினார்.

பொய் பேசாத, வழங்கிய வாக்குறுதிகளைக் காப்பாற்றுகின்ற நேர்மையான அரசியல்வாதி சஜித். எனவே, நம்பிக்கையுடன் வாக்களித்து சஜித் பிரேமதாஸ வை ஜனாதிபதியாகத் தெரிவு செய்யுங்கள்.- என்றார்.

இதன்போது, அக்கரைப்பற்று அனைத்து பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் முன்னாள் தலைவரும், கட்சியின் உயர்பீட உறுப்பினருமாகிய எஸ்.எம். சபீஸ், கட்சியின் உயர்பீட உறுப்பினர் எம்.ஹமீட், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அட்டாளைச்சேனை அமைப்பாளர் ஏ.ஆர்.எம்.அமீர், கட்சியின் முக்கியஸ்தர்கள், பெண்கள் என பலரும் கலந்து கொண்டனர்.





# ஒலிபெருக்கி சாதனம் அன்பளிப்பாக வழங்கல்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்துக்கு ஒலிபெருக்கி சாதனம் ஒன்று அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் நீண்டகாலத் தேவையாக இருந்த ஒலிபெருக்கி தற்போது கிடைக்கப்பெற்றுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலையில் உயர்தரத்தில் கல்வி கற்கும் என்.எம்.நப்றிஸ் என்ற மாணவரின் பெற்றோர்களால் பாடசாலை அதிபர் ஏ.ஜீ.எம்.றிசாத்திடம் அன்பளிப்புச் செய்யப்பட்டது.

இந்த நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் மாணவனின் பெற்றோர் கலந்து கொண்டனர்.





# இரண்டு வீடுகள், விதைப்பு நெல் மூடை; கிண்ணியாவில் நாசப்படுத்திய யானை!

( எச் எம் ஹலால்தீன் )

திருகோணமலை மாவட்டம் கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட ஆயிலியடி, வான்எல கிராமத்துக்குள் இரவு யானை புகுந்து அட்டகாசம் செய்துள்ளது.

இரவு 12 மணியளவில் கிராமத்துக்குள் நுழைந்த யானை இரண்டு வீடுகளையும், விதைப்பதற்காக வீட்டுக்குள் அடுக்கி வைக்கப்பட்டிருந்த நெல்லையும் துவம்சம் செய்துள்ளது.

யானை மனித மோதல்கள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன.

ஏனைய பயன்தரும் தென்னை, வாழை, மரவள்ளி முதலான மரங்களையும் பயிர்களையும் நாசப்படுத்தியுள்ளது.

இரவு நேரங்களில் யானை வருவதால் இக்கிராம மக்கள் தமது தொழில்களை சரிவர செய்ய முடியாதுள்ளது. இரவு நேரங்களில் தூங்குவதும் பிள்ளைகளை வைத்துக் கொண்டிருப்பதும் பெரும் கஷ்டம் எனக் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்த யானையை கட்டுப்படுத்த அரசு முன்வந்து கிராம மக்களுக்கான பாதுகாப்பை ஏற்படுத்தி தர வேண்டும் என்று அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த கிராமத்துக்கு தொடர்ந்து யானை வருகை தந்து பாதிப்பை ஏற்படுகின்றது என்றும் தெரிவிக்கின்றனர். இதனால் பெரும் பாதிப்பு ஏற்படுகிறது என்றும் அரசு இதற்கு நடவடிக்கையில் எடுக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.





# கோர விபத்து!

## ஆந்திராவில் பள்ளத்துள் பாய்ந்த லொறி

## மூட்டைகளுள் உடல் நசுங்கி ஏழு பேர் பலி

ஆந்திராவில் மினி லொறி ஒன்று பள்ளத்துள் கவிழ்ந்து விபத்துக்குள்ளான தில், ஏழுபேர் சம்பவ இடத்திலேயே பலியாகினர். இருவர் படுகாயமடைந் தனர்.

ஆந்திர மாநிலம் டி நரசாபுரம் மண்டலம் பொரம்பாளையம் பகுதியி லிருந்து முந்திரி மூட்டைகளை ஏற்றிக் கொண்டு நிடதவோலு மண்டலம் தாடி மல்லா நோக்கி இன்று அதிகாலை மினி லொறி ஒன்று சென்று கொண்டிருந்தது. அந்த மினி லொறி தேவரப்பள்ளி மண்டலத்தில் உள்ள சின்னைகுடம் சிலகா பகால பகுதியில் வீதியிலிருந்த பள்ளத்தில் இறங்காமல் இருப்பதற் காக திரும்பியபோது சாரதியின் கட்டுப் பாட்டை இழந்து எதிர்பாராத விதமாக பள்ளத்தில் இறங்கி விளைநிலத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

விபத்தைக் கண்ட அப்பகுதி மக்கள் இதுகுறித்து பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்தனர். இதையடுத்து சம்பவ இடத் திற்குச் சென்ற பொலிஸார் லொறிக்கு அடியில் சிக்கியவர்களைப் பொது மக்களின் உதவியுடன் மீட்டனர். விபத்து ஏற்படுத்திய சாரதி அங்கிருந்து தப்பி ஓடிவிட்டார்.

இந்தக் கோர விபத்தில் 7 பேர் முந் திரி மூட்டைகளுக்கு அடியில் சிக்கி மூச்சுத்திணறி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். 2 பேர் காயமடைந்த னர். காயமடைந்தவர்கள் மீட்கப்பட்டு அருகில் உள்ள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்க ளின் உடல்களை மீட்ட பொலிஸார் பிரேத பரிசோதனைக்காக கோவூரு அரசு வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.

இந்த விபத்துக் குறித்து ஏலூரு பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.





# காரசாரம்!

## ட்ரம்ப்-கமலா நேரடி விவாதம்

## சரமாரியாக மாறி மாறி வசைபாடிய வேட்பாளர்கள்

அமெரிக்காவில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு முன்னணி வேட்பாளர்களான டிரம்ப் – கமலா ஹாரிஸ் இடையே இன்று காரசாரமான நேரடி விவதம் நடை பெற்றது.

அமெரிக்காவில் நவம்பர் மாதம் 5ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. இதில் குடியரசுக் கட்சி சார்பில் வேட்பாளராக, முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் போட்டியிடுகிறார். அவருக்கு எதிராக, ஆளும் ஜனநாயகக் கட்சி சார்பில் துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ் களமிறங்கியுள்ளார்.

இந்த நிலையில், கமலா ஹாரிஸ் மற்றும் டிரம்ப் பங்கேற்கும் நேரடி விவாதம் பென்சில்வேனியா மாகாணத்தில் பிலடெல்பியாவில், இலங்கை நேரப்படி இன்று காலை நடந்தது. ஏ.பி.சி. நிறுவனம் ஏற்பாடு செய்திருந்த இந்த விவாதத்தில், இஸ்ரேல்–ஹமாஸ் போர் மற்றும் உக்ரைன்–ரஷ்யா இடையேயான போர், அமெரிக்காவின் பணவீக்கம், கருக்கலைப்பு விவகாரம் உள்ளிட்ட விடயங்கள் முக்கியத்துவம் பெற்றிருந்தன.

இந்த விவாதம் 90 நிமிடங்கள் வரை நடைபெற்றது. எனினும், நிகழ்ச்சியில் பங்கேற்க பார்வையாளர்கள் எவரும் அனுமதிக்கப்படவில்லை.

விவாத நிகழ்ச்சியில் டொனால்ட் டிரம்ப் பேசும்போது,

"விற்பனை வரி எதனையும் நான் விதிக்கவில்லை. மற்ற நாடுகளுக்கே நாம் வரிகளை விதித்து வருகிறோம். சீனாவிடமிருந்து கோடிக்கணக்கான டொலர்களை நாம் பெற்று வருகிறோம் என்பது உங்களுக்குத் தெரிந்த விடயம்.

ஆனால் இன்றோ, நம்முடைய பொருளாதாரம் பயங்கர நிலையில் உள்ளது. ஏனெனில் பணவீக்கத் தாக்கமே அதற்குப் பெரிய காரணம். அமெரிக்க வரலாற்றிலேயே படுமோசம் என்றளவில் பணவீக்கம் காணப்படுகிறது.

இதனால், நடுத்தர வகுப்பு மக்கள் மட்டுமின்றி ஒவ்வொரு வகுப்பினரும் பொருளாதார பேரிடரில் சிக்கிக்கொண்டுள்ளனர் .

நம்முடைய நாட்டிற்கு சிறைகளில் இருந்தும், மனநல காப்பகங்களில் இருந்தும் லட்சக்கணக்கான மக்கள் வந்து சேர்கின்றனர். அவர்கள் நம்முடைய வேலைகளை எடுத்துக் கொள்கின்றனர். ஆபிரிக்க அமெரிக்கர்கள் மற்றும் ஹிஸ்பானிக்குகள் அவற்றை எடுத்துக் கொள்கின்றனர்.

அமெரிக்காவின் பல்வேறு நகரங்களைப் பாருங்கள், ஓஹியோ, கொலராடோ மாகாணங்களில் உள்ள நகரங்களை அவர்கள் கைப்பற்றி உள்ளனர். அவர்கள் வன்முறையில் ஈடுபடுகின்றனர்.

இந்த மக்களையே கமலாவும், பைடனும் நம்முடைய நாட்டிற்குள் வர அனுமதித்து உள்ளனர். அவர்கள் நாட்டை அழித்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஆபத்து நிறைந்தவர்கள். அதிகளவிலான சட்டவிரோத செயல்களில் ஈடுபடுபவர்கள். நம்முடைய நாட்டின் வரலாற்றிலேயே, மிகச் சிறந்த பொருளாதாரங்களில் ஒன்றாக நான் உருவாக்கி வைத்திருந்தேன். இதனை மீண்டும் நான் உருவாக்குவேன். இன்னும் சிறப்பாக ஆக்குவேன்" என்றார்.

இதற்குப் பதிலளித்துப் பேசிய கமலா ஹாரிஸ்,

"டிரம்ப் தனது பதவிக் காலத்தில் வேலைவாய்ப்பின்மையை ஏற்படுத்திவிட்டுச் சென்று விட்டார். ஒரு நூற்றாண்டில் பொது சுகாதாரம் பெரிதும் பாதிக்கப்படும் வகையில் பெருந்தொற்றில் விட்டு விட்டு அவர் சென்றார். நம்முடைய ஜனநாயகத்தின் மீதும் கடுமையான தாக்குதல் நடந்தது.

என்னுடைய திட்டம் பொருளாதாரத்திற்கு வலுச் சேர்க்கும். உண்மையில் மக்களுக்கான திட்டம் எதுவும் டிரம்பிடம் இல்லை. ஏனெனில் அவரை பாதுகாப்பதிலேயே அவருக்கு ஆர்வம் அதிகம். அதனை விடுத்து உங்களை அவர் கவனிக்கமாட்டார்.

டிரம்பின் நிர்வாகம், வர்த்தக பற்றாக்குறை என்ற நிலைக்குக் கொண்டு சென்றது. சீனாவுடன் வர்த்தக போரில் ஈடுபட்டார். கொரோனா பெருந்தொற்றின் போது, அதன் தோற்றம் பற்றிய தகவல்களை வெளியிடும்படி கேட்டபோது, சீனா அதனை கவனத்தில் கொள்ளவில்லை என்பது நாம் அனைவரும் அறிந்த விடயம்.

ஆனால், டிரம்ப் என்ன கூறினார்? சீன அதிபர் ஜின்பிங்குக்கு நன்றி என எக்ஸ் பதிவில் கூறினார்" என்று கமலா ஹாரிஸ் குற்றச்சாட்டாக கூறியுள்ளார்.



பக்கங்கள் 09

# கனடா முரசு

புதன்கிழமை | 11/09/2024

## டௌன்டவுனில் கத்திக் குத்து!

ஒன்றாரியோ, செப்ரம்பர் 11
றொரன்ரோ டௌன்டவுனில் TTC ஸ்ட்ரீட் காரில் ஒருவர் கத்தியால் குத்தப்பட்டதில் நபர் ஒருவர் பலத்த காயம் அடைந்தார்.
யுனிவர்சிட்டி அவென்யூ 02



# விமானிகள் வேலை நிறுத்த முஸ்தீபு ‘எயார் கனடா’ சேவைகள் முடங்கும்?

**ஒன்றாரியோ, செப்ரம்பர் 11**
**வேலை நிறுத்தம் காரணமாக எயார் கனடா நிறுவனம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முதல் விமான சேவைகளை இரத்து செய்யும் நிலை தோன்றியுள்ளது.**

**எயார் கனடா விமானிகள் வேலை நிறுத்தத்திற்கு முன்னதாக செயல்பாடுகளை இடைநிறுத்துவதற்கான திட்டங்களில் விமான நிறுவனம் ஈடுபட்டுள்ளது.**

திங்கட்கிழமை வெளியான ஓர் அறிக்கையில் எயார் கனடா தலைமை நிர்வாக அதிகாரி மைக்கல் ரூசோ இந்தத் தகவலை வெளியிட்டார்.

இந்த வேலை நிறுத்தத்தால் எயார் கனடா பயணிகள் 80 சதவீதம் பேர் பாதிக்கப்படலாம் என கூறப்படுகிறது.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமைக்குள் (15) இருதரப்பு தீர்வு எட்டப்படாவிட்டால், 72 மணி நேர வேலை நிறுத்த அறிவிப்பு வெளியாகலாம் என எதிர்பார்க்கப் படுகிறது.

72 மணி நேர வேலை நிறுத்த அறிவிப்பு காலம் ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவுக்குப் பின்னர் ஆரம்பிக்கும் நிலையில், அடுத்த புதன்கிழமைக்குள் (18) விமான சேவைகள் முழுமையாக நிறுத்தப்படும் எனவும் கூறப்படுகிறது.






# எயார் கனடா வேலை நிறுத்தத்தை தவிர்க்கலாம் என்கிறார் அமைச்சர்

ஒன்றாரியோ, செப்ரம்பர் 11
எயார் கனடா விமானிகள் வேலை நிறுத்தம் தவிர்க்கப்படலாம் என மத்திய தொழிலாளர் அமைச்சர் நம்பிக்கை தெரிவித்தார்.

வேலை நிறுத்தம் காரணமாக எயார் கனடா நிறுவனம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை முதல் விமான சேவைகளை இரத்து செய்யும் நிலை தோன்றியுள்ளது.

இந்த வேலை நிறுத்தம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னதாக அதனைப் பேச்சுகள் மூலம் தவிர்க்கலாம் என அமைச்சர் ஸ்டீவ் மெக்கின்னன் கூறினார்

சில ‘குறிப்பிடத்தக்க சிக்கல்கள்’ தீர்க்கப்படாமல் உள்ள போதிலும், இரு தரப்புக்கும் இடையேயான பேச்சுகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

எயார் கனடா விமானிகள் வேலை நிறுத்தத்திற்கு முன்னதாக செயல்பாடுகளை இடைநிறுத்துவதற்கான திட்டங்களில் விமான நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமைக்குள் இருதரப்பு தீர்வு எட்டப்படாவிட்டால், 72 மணி நேர வேலை நிறுத்த முன்னறிவிப்பு வெளியாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

72 மணி நேர வேலை நிறுத்த அறிவிப்பு காலம் ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவுக்குப் பின்னர் ஆரம்பிக்கும் நிலையில், வரும் புதன்கிழமை விமான சேவைகள் முழுமையாக நிறுத்தப்படும் எனவும் கூறப்படுகிறது.



# கைதான தீவிரவாதியான இளம் மாணவர் மாணவர் விசாவில் கனடாவுக்கு வந்தவர்

ஒன்றாரியோ, செப்ரம்பர் 11

கனடிய பொலிஸாரால் கியூபெக் மாகாண எல்லைக்கு அருகில் வைத்து கடந்த வாரம் கைது செய்யப்பட்ட பாகிஸ்தானிய இளம் மாணவர் விசாவில் கனடாவுக்குள் நுழைந்துள்ளார் என அமைச்சர் மார்க் மில்லர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் நியூயோர்க்கில் புரூக்லின் பெருநகரத்திக் உள்ள யூத மையம் மீது தாக்குதல் நடத்தத் திட்டமிட்ட இந்த நபர் தற்போது பொலிஸாரிடம் சிக்கியுள்ளார். கியூபெக்கில் கைது செய்யப்பட்ட முகமது ஷாசீப் கான் மீது கடந்த வாரம் வழக்கு பதியப்பட்டது.

இந்த நபருக்கு 2023 மே மாதம் மாணவர் விசா வழங்கப்பட்டதாகவும், ஜூன் மாதம் 24 ஆம் திகதி அவர் பியர்சன் சர்வதேச விமான நிலையம் வழியாக கனடாவிற்குள் நுழைந்ததார் எனவும் கனடிய குடிவரவு அமைச்சர் மார்க் மில்லர் தெரிவித்துள்ளார்.

ஷாசீப் கான் தொடர்பில் வெளியிடும் கருத்து இது மட்டுமே என குறிப்பிட்டுள்ள அமைச்சர், அந்த நபர் குறித்து மேலதிக தகவலை வெளியிடுவது ஆபத்து என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஷாசீப் கான் கடந்த புதன்கிழமை கியூபெக்கில் கைது செய்யப்பட்டார். அமெரிக்காவுக்கு சட்டவிரோதமாக நுழையவும், எதிர்வரும் அக்டோபர் 7 ஆம் திகதி யூத மக்கள் மீது தாக்குதல் முன்னெடுப்பதும் அவரது திட்டமாக இருந்துள்ளது.

ஆனால், கடந்த நவம்பர் மாதத்தில் இருந்தே ஷாசீப் கான் தொடர்பில் அமெரிக்க அதிகாரிகள் இரகசியமாக விசாரணை முன்னெடுத்து வந்துள்ளனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

பயங்கரவாத குற்றச்சாட்டு விசாரணையை எதிர்கொள்ள அவரை நியூயோர்க் நகரில் ஒப்படைக்கவும் அமெரிக்கா கோரிக்கை விடுத்துள்ளது.

வெறும் 20 வயதேயான ஐ.எஸ் ஆதரவாளர் ஷாசீப் கான் கைது தொடர்பில் கனடாவில் பல்வேறு விவாதங்கள் முன்வைக்கப்படுகிறது. இதனிடையே பாதுகாப்பு மீறல் தொடர்பான குற்றச்சாட்டுகளை அரசாங்கம் தீவிரமாக எடுத்துக் கொண்டதாக அமைச்சர் மில்லர் தெரிவித்துள்ளார்.









## டௌன்டவுனில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விற்கு மேற்கே உள்ள செயின்ட் பேட்ரிக் ஸ்ட்ரீட் மற்றும் டன்டாஸ் ஸ்ட்ரீட் வெஸ்ட் பகுதிக்கு பிற்பகல் 3 மணிக்குப் பின்னர் இந்த சம்பவம் தொடர்பில் தாம் அழைக்கப்பட்டனர் என றொரன்ரோ பொலிஸார் கூறுகின்றனர்.

TTC ஸ்ட்ரீட்டில் காரில் இருவர் தகராறில் ஈடுபட்டதால், ஒருவர் கத்தியால் குத்தப்பட்டார்.

கடுமையான, உயிருக்கு ஆபத்தான காயங்களுடன் பாதிக்கப்பட்டவர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார் என றொரன்ரோ துணை மருத்துவர்கள் தெரிவித்தனர்.

இதற்கிடையில், சந்தேகத்திற்குரிய நபர், மெலிந்த உடல்வாகு மற்றும் கறுப்பு நிற ஆடைகளை அணிந்த ஆண் என வர்ணிக்கப்பட்டது. அவர் டன்டாஸ் தெரு மேற்கு மேற்கு நோக்கி தப்பிச் சென்றார் எனப் பொலிஸார் கூறுகின்றனர்.




# புதிய ஜனநாயக கட்சி எம்.பிக்கள் மொன்றியல் நகரில் 3 நாள் கூட்டம்

கியூபெக், செப்ரம்பர் 11

புதிய ஜனநாயக கட்சியின் நாடாளுமன்ற குழு மொன்றியல் நகரில் சந்திக்கிறது.

ஜக்மித் சிங் தனது நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் மூன்று நாள் வியூக அமர்வை முன்னெடுக்கிறார்.

லிபரல் கட்சியுடனான நம்பிக்கை ஒப்பந்தத்தில் இருந்து வெளியேறுவதாக புதிய ஜனநாயக கட்சி கடந்த வாரம் அறிவித்தது.

இந்த அறிவித்தலின் பின்னர் நடைபெறும் முதலாவது புதிய ஜனநாயக கட்சி நாடாளுமன்ற குழு கூட்டம் இதுவாகும்.

நேற்று செவ்வாய்க்கிழமை முதல் நாளை வியாழக்கிழமை வரை மொன்ரியலில் சந்திக்கும் புதிய ஜனநாயக கட்சியின் 23 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடுத்த நாடாளுமன்ற அமர்வுக்கு தயாராகும் வகையில் உரையாடல்களை முன்னெடுக்கவுள்ளனர்.

நம்பிக்கை ஒப்பந்தத்தில் இருந்து வெளியேறுவதாக புதிய ஜனநாயக கட்சி அறிவித்துள்ள நிலையில் பொதுத் தேர்தலைத் தூண்டும் வகையில் பல நம்பிக்கை வாக்கெடுப்புகளுக்கு கன்சர்வேட்டிவ் கட்சி உறுதியளித்துள்ளது.

இந்த நிலையில் லிபரல் அரசாங்கத்தை தொடர்ந்தும் ஆட்சியில் வைத்திருக்க நம்பிக்கை வாக்கெடுப்பின் போது அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்குவது குறித்து சாதகமான கருத்துக்களை புளொக் கியுபெக்குவா வெளியிட்டு வருவது



# புதிய ஜனநாயகக் கட்சிக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவோம்!

## ஆளும் லிபரல் கட்சி உறுதி தெரிவிப்பு

புதிய ஜனநாயகக் கட்சிக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படும் என ஆளும் லிபரல் கட்சி தெரிவித்துள்ளது.

கடந்த பொது தேர்தலின் போது லிபரல் கட்சி பெரும்பான்மை பலத்தை பெற்றுக்கொள்ள தவறியதன் காரணமாக அது அரசமைப்பதற்கு புதிய ஜனநாயகக் கட்சி ஆதரவு வழங்கி முண்டு கொடுத்தது.

இதன் போது கூட்டணி அமைப்பதற்கு சில நிபந்தனைகளை புதிய ஜனநாயகக் கட்சி விதித்திருந்தது.

இதன் அடிப்படையில் இரண்டு கட்சிகளும் இணைந்து செயல்பட்டு வந்த நிலையில் ஒரு வார காலத்திற்கு முன்னதாக புதிய ஜனநாயகக் கட்சி லிபரல் கட்சிக்கு வழங்கி வந்த ஆதரவை வாபஸ் பெற்றுக் கொள்வதாக அறிவித்திருந்தது.

கட்சியின் தலைவர் ஜக்மீட் சிங் இது தொடர்பில் அறிவித்திருந்தார். ஆயினும் லிபரல் கட்சிக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகளைத் தொடர்ந்தும் நிறைவேற்றத் திட்டமிட்டுள்ளனர் எனக் கனடிய சுகாதார அமைச்சர் மார்க் ஹாலண்ட் தெரிவித்துள்ளார்.

நீண்ட கால பராமரிப்பு, மருந்து பொருள் தொடர்பான சட்டங்கள், பற்சுகாதாரம் தொடர்பான நலன் குறித்த திட்டங்கள் எனப் பல்வேறு விடயங்களில் புதிய ஜனநாயகக் கட்சி, லிபரல் கட்சியுடன் இணைக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொண்டிருந்தது.

இந்த கோரிக்கைகள் தொடர்பில் அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகள் நடைமுறைப்படுத்தப்படும் என சுகாதார அமைச்சர் ஹொலண்ட் தெரிவித்துள்ளார்.




# ஒன்றாரியோ உணவு வங்கிக்குக் கடந்த வருடம் ஒரு மில்லியனுக்கும் அதிகமான மக்கள் வருகை

ஒன்றாரியோ, செப்ரம்பர் 11

கடந்த ஆண்டில் ஒன்றாரியோ உணவு வங்கிக்கு ஒரு மில்லியனுக்கும் அதிகமான மக்கள் வருகை தந்தனர் எனப் புதிய தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாடு முழுவதும் உணவுப் பொருள்களின் விலைகள் உயர்ந்துள்ளமையே இதற்கான காரணம் என்று பசி-நிவாரண அமைப்புகளின் வலையமைப்பால் வெளியிடப்பட்ட புதிய தரவு தெரிவிக்கிறது.

மாகாணம் முழுவதும் உள்ள 1,200க்கும் மேற்பட்ட உணவு வங்கிகள் மற்றும் பசி நிவாரண அமைப்புகளின் வலையமைப்பினால் நேற்று இந்த அறிக்கை வெளியிடப்பட்டது.

ஏப்ரல் 1, 2023 முதல் மார்ச் 31, 2024 வரை 1,001,150 பேர் உணவு வங்கிக்குச் சென்றுள்ளனர், இது கடந்த ஆண்டை விட 25 சதவீதம் அதிகமாகும் என்று குழு கூறியது.

இது 2019-2020 இலிருந்து 134 சதவீத உயர்வைக் குறிக்கிறது.

ஒன்றாரியோவில் உணவுப் பாதுகாப்பின்மைக்கான முக்கிய காரணம் வாழ்க்கைச் செலவில் விரைவான அதிகரிப்பு மற்றும் 'மாகாணம் முழுவதும் உணரப்படும் உயர்ந்த பொருளாதார பாதிப்பு' என்று அதன் தரவு காட்டுகின்றது.



# வெளவால்களில் ரேபிஸ் நோய் மிசிசாகா நகரில் எச்சரிக்கை!

ஒன்றாரியோ, செப்ரம்பர் 11

சமீபத்தில் இரண்டு வெளவால்களில் ரேபிஸ் நோய் கண்டறியப்பட்டதையடுத்து, 'பாதுகாப்பாக இருக்குமாறு' குடியிருப்பாளர்களை மிசிசாகா நகரம் வலியுறுத்துகிறது.

பீலில் இந்தச் சமீபத்திய நிகழ்வுகள் கடந்த ஐந்து ஆண்டுகளில் அறியப்பட்ட ஒன்பதாவது மற்றும் பத்தாவது நேர்மறை வழக்குகள் என்று மிசிசாகா நகர சபை குறிப்பிட்டது.

மனிதர்கள் அல்லது செல்லப்பிராணிகள் எவருக்கும் தொற்று ஏற்படவில்லை. இருப்பினும், இந்த வைரஸ் 'தீவிரமான உடல்நல அபாயத்தை' ஏற்படுத்தக்கூடும் என்பதால் எச்சரிக்கையாக இருக்குமாறு மிசிசாகா நகரம் மக்களுக்கு அறிவுறுத்துகிறது.

பீல் பிராந்தியத்தில் இந்த இரண்டு சமீபத்திய நிகழ்வுகள், பிராண்ட் கவுண்டியைச் சேர்ந்த ஒருவர் டிமிஸ் காமிங் பகுதியில் பாதிக்கப்பட்ட வெளவால்களுடன் நேரடியாகத் தொடர்பு கொண்ட பின்னர்

- அரை நூற்றாண்டுக்கும் மேலாக, ஒன்ராறியோ தனது முதல் மனித ரேபிஸ் நோய்த்தொற்றைப் புகாரளித்த ஒரு வாரத்திற்குப் பிறகு - வந்துள்ளது.

'உங்களுக்குத் தெரிந்தவர்களுக்கு நினைவூட்டவும், வனவிலங்குகளுடன் நேரடித் தொடர்பைத் தவிர்க்கவும், பீல் பிராந்தியத்தில் இந்த இரண்டு பாசிட்டிவ் ரேபிட் வெளவால்களை நாங்கள் கண்டறிந்துள்ளோம் என்பதை அறிந்துகொள்ளவும் இந்த வாய்ப்பைப் பயன்படுத்த விரும்புகிறோம்' என்று பீலில் உள்ள சுகாதார இணை மருத்துவ அதிகாரி மோனிகா ஹாவ் நேற்று தெரிவித்துள்ளார்.





# கனடாவில் களைகட்டிய விபுலாநந்த அடிகளாரின் துறவற நூற்றாண்டு விழாவும் பரிசளிப்பு நிகழ்ச்சியும்

(வி.ரி.சகாதேவராஜா)

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் துறவறநூற்றாண்டு தின விழாவும் 77 ஆவது நினைவுதின பரிசளிப்பு விழாவும் கனடாவில் கடந்த சனிக்கிழமை சிறப்பாக நடைபெற்றன.

கனடா சுவாமி விபுலானந்த கலை மன்றம் அதன் தலைவர் கே.புருஷோத்தமன் தலைமையில் றொரன்ரோவில் சிறப்பாக இந்நிகழ்வை நடாத்தியது.

இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக தாயகத்தில் இருந்து வருகை தந்த, பேராசிரியர் செல்லையா அருள்மொழி(காரைதீவு) - திருமதி சத்தியவதி அருள்மொழி ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

விழாவில் பிரபல எழுத்தாளர் கே. குமரகுரு வரவேற்புரை நிகழ்த்த பேராசிரியர் இ.பாலசுந்தரம், மாவிலிமைந்தன் எஸ்.சண்முகராஜா ('துறவற நூற்றாண்டு') ஆகியோர் உரைநிகழ்த்தினர்.

நிகழ்ச்சி ஒழுங்கமைப்பை மன்றச் செயலாளர் நித்தி சிவானந்தராஜா மேற்கொண்டிருந்தார்.

விபுலானந்தகீதத்தை மட்டக்களப்பு சுவாமி விபுலானந்தர் அழகியல் கற்கைகள் நிறுவக இசைத்துறை நுண்கலைமாணி திருமதி ஸ்ரீஜெனா தயாபரனும், குழுநடனத்தை ஸ்ரீமதி நிரோஷா சுதேசனின் மாணவிகளும் நிகழ்த்தினர்.

'சுவாமி விபுலாநந்தர்' எனும் தலைப்பில் செல்வி அட்சயா சிவகுகன் அனைவரையும் சுண்டி இழுத்த அழகான காட்சிப்படுத்தலை நிகழ்த்தினார்.

தமிழமிர்தம் நிகழ்வை செல்வன் அபீஷ்ணன், செல்வி ராகவி, செல்வன் அமுதீசன் ஆகியோர் நிகழ்த்த நன்றியுரையை செயலாளர் நித்தி சிவானந்தராஜா ஆற்றினார்.

மன்றம் நடாத்திய போட்டிகளில் வெற்றி பெற்ற 60 மாணவர்களுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர்.




















# வகுப்புத் தோழியினால் தீ மூட்டப்பட்ட சிறுமிக்கு குவிந்து வரும் உதவிகள்

கனடாவில் வகுப்புத் தோழி ஒருவரினால் தீமூட்டி காயப்படுத்தப்பட்ட சக மாணவிக்கு பெருமளவு உதவிகள் குவிந்து வருகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஈவன் ஹார்டி பாடசாலையில் கற்கும் மாணவி ஒருவர் அண்மையில் தீ மூட்டப்பட்ட நிலையில் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார்.

இவரை வகுப்புத்தோழியான மாணவி ஒருவர் இவ்வாறு தீமூட்டி காயப்படுத்தியுள்ளார்.

இவ்வாறு பாதிக்கப்பட்ட தரம் ஒன்பதில் கற்கும் மாணவிக்கு பெருமளவானவர்கள் உதவிகளை வழங்கி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரையில் இந்த மாணவியின் சிகிச்சைக்காக சுமார் 60 ஆயிரம் டாலர்கள் நிதி திரட்டப்பட்டுள்ளது.

14 வயதான சிறுமி ஒருவர் சக மாணவி மீது இவ்வாறு தீ மூட்டியதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த தீமூட்டல் சம்பவம் ஒரு கொலை முயற்சியாக கருதப்படுகின்றது. சம்பவத்துடன் தொடர்புடைய சிறுமியைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கேள்வியுற்றவர்கள் உதவிகளை செய்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் அடிப்படையில் சுமார் 900 நன்கொடையாளர்கள் இதுவரையில் 60 ஆயிரம் டாலர் வரையில் உதவியுள்ளனர்.

இந்தச் சிறுமி, எட்மாண்டனில் அமைந்துள்ள வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது.



# இலக்கு வைக்கப்பட்ட சூட்டில் 16 வயது மாணவன் அருந்தப்பு

ஸ்காப்ரோவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் தரம் 12ல் கற்கும் மாணவன் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இலக்கு வைக்கப்பட்டு திட்டமிடப்பட்ட அடிப்படையில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் இந்த துப்பாக்கிச் சூட்டின் போது மாணவரின் தலையில் துப்பாக்கிச் சன்னம் உராய்ந்து சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

16 வயதான மாணவரே சம்பவத்தில் சிறு காயங்களுடன் உயிர் தப்பியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

தாக்குதலை மேற்கொண்டவர் எனச் சந்தேகிக்கப்படும் நபர் தப்பிச் சென்றுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.




# மொன்றியலில் விமான விபத்தில் சிக்கி தெய்வாதீனமாக உயிர் பிழைத்த நால்வர்

கனடாவின் மொன்றியலின் லவுரான்டியன்ஸ் என்னும் பகுதியில் இடம்பெற்ற விமான விபத்தில், அதில் பயணம் செய்தவர்கள் தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளனர்.

கியூபெக் பொலிஸார் இது தொடர்பான தகவலை வெளியிட்டுள்ளனர்.

விமானம் விபத்துக்குள்ளானதை தொடர்ந்து கியூபெக் வாகன பொலிஸார் குறித்த பகுதியில் தேடுதல் நடத்தியுள்ளனர்.

மொன்றியாலின் வடமேற்கு பகுதியில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

இந்த விபத்தின் போது விமானத்தில் பயணித்த நான்கு பேர் சிறு காயங்களுடன் உயிர் தப்பியுள்ளனர்.

விமானம் விபத்துக்குள்ளாகி இரண்டு மணித்தியால இடைவெளியில் விமானத்தில் பயணித்தவர்கள் கண்டுபிடிக்கப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சந்தர்ப்பத்தில் குறித்த நான்கு பேரும் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர்.

உள்ளூர் தீயணைப்புப் படையின் ஒத்துழைப்புடன் இந்த மீட்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

விமானி ஒருவரும் மூன்று பயணிகளும் இவ்வாறு காயம் அடைந்தனர் எனவும் அவர்களில் எவருக்கும் உயிர் ஆபத்து கிடையாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

விமான விபத்து தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

தொழில்நுட்பக் கோளாறு காரணமாக இந்த விபத்து இடம்பெற்று இருக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது.



# போதைப்பொருள் குற்றங்களுடன் தொடர்பு பதினொரு பேர் ரொறன்ரோவில் சிக்கினர்!

கனடாவின் ரொறன்ரோவில் போதைப்பொருள் குற்ற செயல்களுடன் தொடர்புடைய 11 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சந்தேக நபர்களுக்கு எதிராக 60க்கும் மேற்பட்ட குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

இந்த விவகாரம் தொடர்பில் சுமார் ஒரு மாத கால விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

போதைப்பொருள் கடத்தல் மற்றும் விநியோக நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக இந்தச் சந்தேக நபர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஹால்டன் பிராந்திய பொலிஸ் சேவையினர் இந்த விடயம் தொடர்பில் விசாரணைகள் நடத்தியுள்ளனர்.

இந்த விசேட விசாரணை நடவடிக்கை ‘கட் ஃபிஷ்’ எனப் பெயரிடப்பட்டு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர்களிடமிருந்து மூன்று கைத்துப்பாக்கிகள், 4 கிலோ கிராம் எடையுடைய மெத்தப்பட்டமைன் போதை பொருள், 3 கிலோ கிராம் எடையுடைய கொக்கேய்ன் போதை பொருள், சுமார் ஒரு கிலோ கிராம் எடையுடைய பென்டனயில் போதை பொருள் மற்றும் 120,000 டொலர் பணம், இரண்டு வாகனங்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.




# பாலியல் பயன்பாட்டுப் பொருள்கள் குறித்து கனடிய சுகாதார நிறுவனம் எச்சரிக்கின்றது

டொரன்றோ பெரும்பாக பகுதியில் கனடிய சுகாதார நிறுவனம் சில பொருடள்களைக் கொள்வனவு செய்வது தொடர்பில் எச்சரிக்கை விடுத்துள்ளது.

பாலியல் தேவைகளுக்காக பயன்படுத்தும் உற்பத்தி பொருள்கள் கொள்வனவு செய்வது தொடர்பில் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மார்க்கம், மிஸஸாகா, விட்பேய் மற்றும் வுட் பிரிட்ஜ் ஆகிய பகுதிகளில் இருந்து சட்டவிரோதமான அடிப்படையிலான 29 வகை உற்பத்திகள் மீட்கப்பட்டுள்ளன.

இவை சட்ட ரீதியான முறையில் அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்ட உற்பத்திகள் அல்ல என தெரிவிக்கப்படுகிறது.

சந்தையில் விற்பனை செய்யப்படும் இந்தள் பொருள்கள் அங்கீகரிக்கப்படாதவை எனவும் சட்டவிரோதமான இந்த உற்பத்திகளை பயன்படுத்தும் வாடிக்கையாளர்களுக்கு பாரதூரமான சுகாதார கேடுகள் ஏற்படக்கூடும் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எனவே இந்த விடயம் தொடர்பில் மக்கள் அவதானத்துடன் செயல்பட வேண்டும் என கனடிய சுகாதார நிறுவனம் ஆலோசனை வழங்கியுள்ளது.

மருத்துவ தரப்பினரின் ஆலோசனை இன்றி இவ்வாறான பொருள்கள் பயன்படுத்துவது குறித்து ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.





# ட்ரூடோ பதவி விலகினால்தான் ஆளும் லிபரல் கட்சி முன்னேறும்

## அதன் எம்.பி. பிரதமருக்கு எதிராகப் போர்க்கொடி

கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவுக்கு எதிராக போர்க்கொடி தூக்கியுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர், ட்ரூடோ பதவி விலகினால்தான் கட்சி முன்னேறும் என்று கூறி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார்.

கனடாவில், கியூபெக் மாகாணத்தில், நீண்ட காலமாக லிபரல் கட்சி நாடாளுமன்ற உறுப்பினராக இருப்பவர் அலெக்சாண்ட்ரா மெண்டஸ்.

ட்ரூடோ பதவி விலகவேண்டும் என ஏராளமான மக்கள் தன்னிடம் கூறிவருகின்றனர் என அவர் தெரிவித்துள்ளார்.

என் தொகுதி மக்கள், லிபரல் கட்சியை அடுத்த தேர்தலுக்குள் வழிநடத்தும் தலைவராக ட்ரூடோவைப் பார்க்கவில்லை என்கிறார் அலெக்சாண்ட்ரா.

ஒன்பது ஆண்டுகளாக ஆட்சி செய்த ட்ரூடோ எதைச் சாதித்தார் என்பது தங்களுக்குத் தெரியவில்லை என கனேடிய மக்கள் கூறுகின்றனர் எனத் தெரிவிக்கிறார் அவர்.

கட்சி அல்ல, கட்சியின் தலைமைதான் பிரச்சினைக்குக் காரணம் என்று கூறும் அலெக்சாண்ட்ரா, ட்ரூடோ பதவி விலகினால்தான் கட்சி முன்னேறும் என்கிறார்.

கனடா பிரதமரும், லிபரல் கட்சியின் தலைவருமான ஜஸ்டின் ட்ரூடோ பதவி விலகவேண்டும் என வெளிப்படையாக கருத்து தெரிவித்துவரும் நாடாளுமன்ற உறுப்பினர்களில் அலெக்சாண்ட்ராவும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.



# அடுத்த ஆண்டு முற்பகுதி வரையில் ட்ரூடோ பதவியில் தொடருவாராம்

கனடாவின் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ எதிர்வரும் வருடம் வரை பிரதமராக தொடர வாய்ப்புள்ளதாக அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கிட்டத்தட்ட 9 வருடங்கள் பிரதமர் பதவியில் நிலைத்ததன் பின்னர் ட்ரூடோ, தனக்கான ஆதரவை பெருமளவில் இழந்துள்ளார்.

கடந்த வாரம், புதிய ஜனநாயகக் கட்சியின் ட்ரூடோவுக்கான ஆதரவும் சந்தேகத்திற்கு உள்ளாகியுள்ள நிலையில், அவரின் பிரதமர் பதவி மேலும் கேள்விக்குறியாகியுள்ளது.

தற்போது, மொத்தம் 354 கனேடிய நாடாளுமன்ற ஆசனங்களில் ட்ரூடோவின் லிபரல் கட்சி வெறும் 154 ஆசனங்களை மட்டுமே கொண்டுள்ளது.

இந்நிலையில், 170 நாடாளுமன்ற உறுப்பினர்கள் லிபரல் கட்சிக்கு எதிராக வாக்களித்தால், அரசாங்கம் அதன் பதவிக்கலமான 2025ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்திற்கு முன்னதாகவே கலைக்கப்படும்.

இது விரைவான நாடாளுமன்றத் தேர்தலுக்கு வழிவகுக்கும்.

இவ்வாறான சூழ்நிலையில், கன்சர் வேடிவ் கட்சி பெரும்பான்மையுடன் ஆட்சியமைக்கும் எனக் கருத்துக் கணிப்புக்கள் கூறுகின்றன.

கனேடிய நாடாளுமன்றத்தில் அடுத்த நம்பிக்கை வாக்கெடுப்பு நவம்பர் மாத இறுதியில் அல்லது டிசம்பர் மாத தொடக்கத்தில் நடைபெறவுள்ள நிலையில், ட்ரூடோவின் பிரதமர் பதவி குறைந்தது இரண்டு மாதத்திற்கு நீடிப்பது உறுதி.

இதேவேளை, நம்பிக்கை வாக்கெடுப்பு நடைபெறும் பட்சத்தில், புதிய ஜனநாயகக் கட்சி அப்போதைய சூழ்நிலையை கருத்திற்கொண்டு வாக்களிக்கும் என அக்கட்சியின் தலைவர் ஜக்மீத் சிங் தெரிவித்துள்ளார்.

இந்நிலையிலேயே, 2025ஆம் ஆண்டின் தொடக்கத்தில் பிரதமராக ட்ரூடோ தொடர்வதற்கு வாய்ப்புள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

